




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351








திங்கள் ❖ பிப்ரவரி. 20, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 137 ❖ ரூ.10


## பொன்னமராவதி அருகே நடைபெற்ற மஞ்சுவிரட்டு போட்டியில்

# வாலிபர் பலி

### மஞ்சுவிரட்டில் பார்வையாளராக பங்கேற்ற இன்று சிங்கப்பூர் செல்ல இருந்த நபர்

## மாடு குத்தி வீசியதில் பரிதாபமாக பலியானார்





பொன்னமராவதி, பிப்.20–

**புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே வார்ப்பட்டு கிராமத்தில் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு நடைபெற்ற மஞ்சுவிரட்டு போட்டியில் 25 வயதுடைய வாலிபர் மாடு குத்திவீசியதில் பலியானார்.**

பொன்னமராவதி அருகே வார்ப்பட்டு கிராமத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. இந்த நிகழ்வில் மஞ்சுவிரட்டு போட்டியின் மீது கொண்ட ஆர்வம் காரணமாக பார்வையாளராக பங்கேற்ற கண்ணனூர் புதுவயல் கிராமத்தை சேர்ந்த சிவா என்பவர் மாடு குத்தியதில் பரிதாபமாக பலியானார். பலியான இளைஞர் சிவா இன்று பணி நிமிர்த்தமாக சிங்கப்பூர் செல்ல இருந்தது குறிப்பிடதக்கது. இச்சம்பவம் குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே போல் அறந்தாங்கி அருகே சிலட்டூர் கிராமத்தில் கோவில் திருவிழாவை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது. இதில் 13 காளைகளும் 117 மாடுபுடி வீரர்கள் பங்கேற்றனர். மாடு முட்டியதில் மாடுபிடி வீரர் பலத்த காயத்துடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சிலட்டூர் கிராமத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் சந்தனக்காப்பு திருவிழாவை முன்னிட்டு முத்துமாரியம்மன் கோவில் திடலில் வடமாடு மஞ்சுவிரட்டு நடைபெற்றது. இதில் தஞ்சை, திருச்சி, ராமநாதபுரம், மதுரை புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 13 காளைகளும் அதே போன்று பல்வேறு மாவட்டங்களில் இருந்து 117 மாடுபுடி வீரர்களும் பங்கேற்றனர். இந்த வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியில் ஒரு காளையை பெரிய கயிற்றில் கட்டிவிட்டு இந்தக் காளையை அடக்க ஒன்பது பேர் கொண்ட குழு களத்தில் இறக்கிவிடப்பட்டு ஒவ்வொரு காளைகளுக்கும் 20 நிமிடம் நேரம் ஒதுக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டது.

இந்த 20 நிமிடத்திற்குள் மாடுபிடி வீரர்கள் ஒன்பது பேர் போட்டி போட்டுக் கொண்டு காளைகளை அடக்கினர். இதில் சில காளைகள் மாடுபிடி வீரர்கள் கையில் சிக்காமல் போக்கு காட்டியது சில காளைகளை மாடுபிடி வீரர்கள் அடக்கினர் இதில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் ரொக்கப் பரிசும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. இந்த வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியினை சுற்றி அமர்ந்திருந்த ஏராளமான பொதுமக்கள் ஆரவாரத்துடன் கைதட்டி விசில் அடித்தும் உற்சாகமாக கண்டுகளித்தனர் நடைபெற்ற வடமாடு மஞ்சுவிரட்டில் மாடு முட்டியதில் மதுரையை சேர்ந்த மனோஜ் படுகாயம் அடைந்தார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**

## மத்தியப் பிரதேசத்தில் பேருந்து கவிழ்ந்ததில் கேரளாவைச் சேர்ந்த 16 மாணவர்கள் காயம் ஒருவர் பலி

மத்தியப்பிரதேசம் பிப்.20–

மத்தியப்பிரதேசத்தில் பேருந்து கவிழ்ந்ததில் கேரளாவைச் சேர்ந்த 16 மாணவர்கள் காயமடைந்தனர்.

கேரளாவின் திருச்சூரில் உள்ள கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியப் பிரதேச மாநிலம் சாகரில் உள்ள ஹரிசிங் கவுர் பல்கலைக்கழகத்திற்கு களப்பயணம் சென்றனர். இந்த நிலையில் பயணத்தின் ஒருபகுதியாக நேற்று முந்தினம் மாலை பேருந்தில் கட்னி நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது பன்னா மாவட்டத்தில் உள்ள குவாகேடா கிராமத்திற்கு அருகே சென்று கொண்டிருந்த போது பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்து உதவியாளர் உயிரிழந்தார். மேலும் பேருந்தில் பயணம் செய்த 32 மாணவர்களில் 16 பேர் காயமடைந்தனர். இதையடுத்து காயமடைந்தவர்கள் ராய்புரா அரசு மருத்துவமனையில் முதன்மை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் தலையில் படுகாயமடைந்த மாணவர் உட்பட இருவர் மேல்சிகிச்சைக்காக ஜபல்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## ரஷ்யா, தூதர்கள் என்ற பெயரில் உளவாளிகளை நாட்டில் இறக்கி உள்ளது தூதர்களை வெளியேற்ற நெதர்லாந்து அரசு முடிவு

**நெதர்லாந்து, பிப்.20–**

ரஷ்யா ஓராண்டாக உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட்டு உள்ளது. இதற்கு உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. போரை முடிவுக்கு கொண்டு வரும் தீர்வு காண, தூதரகம் வழியே அமைதி பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என்று இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. எனினும், உலக நாடுகள் கோரிக்கையை ரஷ்யா புறக்கணித்து உள்ளது. இந்நிலையில், ரஷ்யாவுக்கு பொருளாதார தடை விதித்தும் அந்நாடு போரில் இருந்து விலகிடவில்லை. நெதர்லாந்து அரசில் வெளியுறவு மந்திரியாக உள்ள வாப்கே ஹோயெக்ஸ்டிரா வெளியிட்டு உள்ள டுவிட்டர் செய்தியில், தூதரக போர்வையில் ரஷ்யா தனது உளவாளிகளை நெதர்லாந்தில் பணியமர்த்த முயற்சித்து உள்ளது என்பது ஏற்க முடியாதது.

அதனாலேயே நெதர்லாந்து நாட்டில் உள்ள ரஷ்ய தூதர்களை வெளியேற்றும் முடிவில் உள்ளோம். இதுதவிர, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் உள்ள எங்களது தூதரக அலுவலகம் மூடப்படுகிறது. ஆம்ஸ்டர்டாமில் உள்ள ரஷ்ய வர்த்தக அலுவலகமும் மூடப்பட உள்ளது என அவர் தெரிவித்து உள்ளார். இதுபற்றி தி நெதர்லாந்து டைம்ஸ் வெளியிட்டு உள்ள செய்தியில், வெளியேற்றப்படும் மொத்த ரஷ்ய தூதர்கள் எண்ணிக்கை விவரம் தெளிவாக தெரியவரவில்லை. தி ஹேக்நகரில் ஒருதூதரகம், ஆம்ஸ்டர்டாமில் உள்ள ரஷிய வர்த்தக அலுவலகம் தவிர்த்து, லேண்ட்கிராபிலும் ரஷ்ய கூட்டமைப்புக்கு என தூதரகம் ஒன்றும் உள்ளது என தெரிவித்து உள்ளது. இதன்படி, வருகிற திங்கட்கிழமை ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் உள்ள டச்சு தூதரகம் மூடப்பட உள்ளது. அதனால், டச்சு நாட்டின் அனைத்து குடிமக்கள் மற்றும் அமைப்புகளும் மாஸ்கோவில் உள்ள தூதரக அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தூதரக சேவைகளை பெற்று கொள்ளலாம் என்றும் செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது. ரஷ்யாவுக்கு, அந்நாட்டு தூதர்கள் வெளியேற 2 வார கால அவகாசம் அளித்து உள்ளது. ரஷியாவும் இதுபோன்ற வெளிநாட்டுதூதர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## திரையுலகில் தனக்கென ஒரு முத்திரையை பதித்த நடிகர் மயில்சாமியின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்



சென்னை பிப்.20–

நடிகர் மயில்சாமியின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நகைச்சுவை நடிகர் மயில்சாமி மாரடைப்பால் நேற்று அதிகாலை உயிரிழந்தார். மயில்சாமியின் திடீர் மறைவு அவரது ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மயில்சாமியின் மறைவுக்கு திரையுலகத்தினர், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நடிகர் மயில்சாமியின் மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "நடிகர் மயில்சாமி மறைந்தார் என்ற துயர்மிகு செய்தியறிந்து வருந்தினேன். பல குரல்களில் நகைச்சுவையாக பேசும் மயில்சாமி, தனது ஒலிநாடாக்கள் மூலம் அறிமுகமானவர். காமெடி டைம் நிகழ்ச்சியின் மூலம் தமிழக மக்களின் இல்லங்களில் ஒருவராகவே பார்க்கப்பட்டவர். திரையுலகில் தனக்கென ஒரு முத்திரையை பதித்த நடிகர் மயில்சாமியின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## சத்ரபதி சிவாஜியின் வீரமும் சிறப்பான நிர்வாகமும் ஊக்கமளிப்பதாக பிரதமர் மோடி டுவிட்



டெல்லி பிப்.20–

பாசம், பணிவு, குருபக்தி, நட்பு, நேசம், வீரம், வாள் பயிற்சி, குதிரை ஏற்றம் என அனைத்திலும் சிவாஜி தலைசிறந்து விளங்கினார்.

முகலாயர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் சவாலாக திகழ்ந்த மராட்டிய மாமன்னன் சத்ரபதிசிவாஜியின் ஆட்சி காலம் தென்னிந்திய வரலாற்றின் பொற்காலம் என கருதப்படுகிறது. இத்தகைய சிறப்புகளை பெற்ற மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் 395–வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. பிறந்தநாளையொட்டி சத்ரபதி சிவாஜிக்கு பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "சத்ரபதி சிவாஜி அவர்களின் பிறந்தநாளில் அவருக்கு நான் மரியாதை செலுத்துகிறேன். அவரது வீரமும், சிறப்பான நிர்வாகமும் நமக்கு ஊக்கமளிக்கிறது" எனப் பதிவிட்டுள்ளார். சத்ரபதி சிவாஜி என்று அழைக்கப்படும் சிவாஜி ராஜே போன்ஸ்லே, முகலாயர் ஆட்சி காலமான 1627–ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 19–ம் தேதி புனேவில் உள்ள சிவநேரி கோட்டை என்ற இடத்தில் சஹாஜி ஜிஜாபாய் ஆகியோருக்கு இளைய மகனாக பிறந்தார். இளமையிலேயே ராமாயணம், மகாபாரதம் உள்ளிட்ட இதிகாச காவியங்களை கற்றறிந்து, சிறந்த வீரராகவும் திகழ்ந்தார்.

## இயற்கை உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியை 100 கோடி அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும்

### மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பேச்சு



சிக்கிம் பிப்.20–

இயற்கை சார்ந்த உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியை வரும் 2030–ஆம் ஆண்டுக்குள் 100 கோடி அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும் என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பேசியுள்ளார்.

சிக்கிம் மாநிலத்தின் கேங்டாக் நகரில் நடந்த சிக்கிம் வர்த்தக மற்றும் தொழில் துறைக்கான உறுப்பினர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் குடிமை பொருள் விநியோகம் மற்றும் ஜவுளிதுறைக்கான மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் பேசும்போது, நாட்டில் இயற்கை சார்ந்த உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியை, ரூ.8.28 கோடி என்ற அளவில் இருந்து ரூ.8276.55 கோடியாக வரும் 2030–ம் ஆண்டுக்குள் உயர்த்த வேண்டும். அது சாதிக்கப்பட கூடியதே என்பதில் 100 சதவீத நம்பிக்கை எனக்கு உள்ளது என பேசியுள்ளார்.

இதற்காக, மத்திய அரசின் சார்பில் அதிக தரம் வாய்ந்த, நவீன வசதிகளுடன் கூடிய, இயற்கை சார்ந்த பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், இயற்கை பரிசோதனை ஆய்வகம் ஒன்றை அமைக்க இருக்கிறோம் என கூறியுள்ளார். இதற்கு ஏற்ற வகையில், ஒரு நீடித்த இயற்கை சார்ந்த மாநிலம் ஆக உருவாவதற்கான ஆற்றல் சிக்கிம் மாநிலத்திற்கு உள்ளது என அவர் கூறியதுடன், இந்த மைல்கல்லை அடைவது, மாநிலம் வளர்ச்சி அடைய உதவுவதுடன், சுற்றுலா துறையும் வளரும் என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

## "சத்தியவாணி முத்துவை வீட்டிற்கு அழைத்து வந்ததுக்கு அப்பா என்னை சாட்டையால் அடித்தார்"

### நினைவலைகளை பகிர்ந்த அமைச்சர் துரைமுருகன்!



**சென்னை, பிப்.20–**

சென்னையில் நடைபெற்ற அம்மையார் சத்தியவாணி முத்து நூற்றாண்டு விழாவில் அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று பேசினார்.

அதில், "இன்றைக்கு கழகத்தின் பொதுச்செயலாளராக இருக்கிறேன். என்னை உறுப்பினராக்கியது சத்தியவாணி முத்துதான். நான் பட்டை போட்டுக்கொண்டு ஆத்திகனாக இருந்தேன். அப்போது என் ஆசிரியர் ஒருவர் நாத்திகத்தை அறிமுகப்படுத்தினார்.

அவரால் கொஞ்சம் மாறினேன். முழுமையாக மாறவில்லை. அப்போது எங்கள் கிராமத்தில் இருவர் கருப்பு சட்டை அணிந்ததற்காக அவர்கள் சட்டை கழற்றி கொழுத்தினார்கள். எங்கள் கிராமத்தில் காங்கிரஸ் கட்சிகாரர்கள் மட்டும்தான்.

அதை ஏன் என கேட்டதற்கு அவர்கள் திராவிடர் கட்சியினர் என சொன்னார்கள். அப்படியா அப்போ நான் திராவிட கட்சி ஆரம்பிக்கிறேன் என கூறினேன். அப்போது காட்பாடி வட்ட செயலாளரிடம் சென்று எங்கள் ஊரில் கிளை கழகம் ஆரம்பிக்க வேண்டும் என கேட்டேன். அதை தொடங்கி வைக்க அம்மையார் சத்தியவாணி முத்துதான் வந்தார்.

எங்கள் வீடுதான் கொஞ்சம் தங்கும் அளவிற்கு இருக்கும். அம்மையார் எங்கள் வீட்டில் தங்கினார். அவர் சாப்பிட்டுவிட்டு கூட்டத்தில் பேசிவிட்டு மீண்டும் சாப்பிட்டுவிட்டு சென்றார்.

மறுநாள் பக்கத்து காலணியில் இருந்து இருவர் வந்து, 'எங்களுக்கு எப்ப சோறு போட போறீங்க'னு என் அப்பாவிடம் கேட்டனர். அவர் ஏன் என கேட்டதற்கு, நேற்று வந்த அம்மையார் எங்க சொந்தகாரங்க என சொன்னார்கள்.

ஏறு ஓட்டிகொண்டிருந்த என் தந்தை சாட்டையை கொண்டு என்னை அடித்து வெளுத்துவிட்டார். அப்போது என் தாயார்தான் என்னை காப்பாற்றினார். நான் முதல் முதலில் திமுகவில் சேர்ந்தது அம்மையார் சத்தியவாணி முத்து கையெழுத்திட்டுதான்.

அவர் கையெழுத்து போட்ட ராசி, நான் இன்னும் திமுகவில் இருக்கிறேன். அவர் வழிமாறி சென்றபோதும் என் மீது பாசமாக இருப்பார். என்னை சந்திக்கும்போது 'உன் அப்பா போட்ட அடி வாங்கிட்டு வந்த, இப்போ நல்ல இடத்தில் இருக்க'னு பாராட்டினார்கள். என் தாயை ஒற்ற அவர்கள் நிகழ்ச்சியில் பேசும் வாய்ப்பு கிடைத்தற்கு மகிழ்ச்சி அடைகிறேன்" என கூறி உரையை நிறைவு செய்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## அரிமளம் மெர்க்குரி பள்ளியில் விளையாட்டு விழா

அரிமளம் பிப்.20–

அரிமளம் மெர்க்குரி பள்ளியில் விளையாட்டு விழா சிறப்பான முறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டது. எல்கேஜி மற்றும் யூகேஜி மாணவர்களுக்கு முயல் ஓட்டம், கங்காரு ஓட்டம் மற்றும் தவளைப்போல தாவி ஓடுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றது. மேலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இருபது மீட்டர் ஓட்டம், கப் லெமன், மியூசிக்கல் பால், ஊசி நூல் கோர்த்தல், சாக்குடன் உருளைக்கிழங்கு சேகரித்து ஓடுதல், பிரேக் வாக் கிராஸ் பிரேக் வாக் போன்ற பல்வேறு வகையான போட்டிகள் நடைபெற்றது.



பிறகு ஆசிரியர்களுக்கு போட்டிகள் நடைபெற்றது. நிறைவாக பெற்றோர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு அணிகளாக பிரிக்கப்பட்டு லக்கி கார்னர் போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளில் பெற்றோர்கள் மகிழ்ச்சியாக கலந்து கொண்டனர். அனைத்து போட்டிகளையும் ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர் ரெங்கராஜ் நடத்திக்கொடுத்து சிறப்பித்தார். முன்னதாக விழாவிற்கு வருகை புரிந்தவர்களை பள்ளி தாளாளர் ரமணன் வரவேற்றார். நிறைவாக பள்ளி முதல்வர் முத்துலெட்சுமி நன்றி கூறினார். போட்டிகளுக்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

## ஈரோடு கிழக்கு தொகுதியில் பூத் சிலிப் விநியோகம் செய்யும் பணி தொடக்கம்

ஈரோடு பிப்.20–

வரும் 25-ந் தேதி மாலையுடன் பிரசாரம் நிறைவு பெறுவதால் தலைவர்கள் உச்சகட்ட பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் வாக்குப் பதிவுக்கு இன்னும் 7 நாட்களே உள்ளதால் பிரச்சாரம் அனல் பறக்கிறது. இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணி சார்பில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், அ.தி.மு.க. சார்பில் கே.எஸ். தென்னரசு, தே.மு.தி.க. சார்பில் ஆனந்த், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 77 பேர் களத்தில் உள்ளனர். தற்போது தேர்தலில் போட்டியிடும் கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்து வருகிறார்கள்.



இதனால் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் களை கட்டியுள்ளது.

கிழக்கு தொகுதியில் எந்த வீதிகளில் சென்றாலும் அரசியல் கட்சியினர் ஊர்வலமாக சென்று தீவிரமாக வாக்குகள் சேகரித்து வருகிறார்கள். இந்த நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான பூத் சிலிப் விநியோகம் செய்யும் பணி நேற்று காலை முதலே நடைபெற்று வருகிறது. 100–க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வீடு, வீடாகச் சென்று பூத் சிலிப் வழங்கி வருகின்றனர். வரும் 25–ம் தேதி வரை பூத் ஸ்லிப் வாக்காளர்களுக்கு வழங்கப்பட உள்ளதாக தேர்தல் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். 2.27 லட்சம் வாக்காளர்கள் உள்ள இந்த தொகுதியில் வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்கும் வகையில் மொத்தம் 238 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

## பள்ளிகளுக்கு மானியம் வழங்குவதில் உரிய வழிமுறைகளை பின்பற்றி செயல்பட வேண்டும் – தொடக்கக் கல்வி இயக்குநர் சுற்றறிக்கை

சென்னை பிப்.20–

பள்ளிகளுக்கு மானியம் வழங்குவதில் உரிய வழிமுறைகளை பின்பற்றி செயல்பட வேண்டும் என தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

தொடக்கக் கல்வி இயக்குநர் க.அறிவொளி, அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த சுற்றறிக்கையில், நடப்பு கல்வியாண்டில் (2022-23) அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கான பராமரிப்பு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, பள்ளிகளுக்கு மானியம் வழங்குவதில் உரிய வழிமுறைகளை பின்பற்றி செயல்பட வேண்டும். நிரந்தர அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் 4 வகைச் சான்றிதழ்கள் பெற்றிருப்பதை சரிபார்த்த பின்னரே கற்பித்தல் மானியத்தை விடுவிக்க வேண்டும். அரசு ஒப்புதல் அளித்த இடங்களில் தான் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## இந்தியா முழுவதும் 57 கண்டோன்மெண்ட் பகுதிகளுக்கு தேர்தல் நடத்த மத்திய அரசு அனுமதி

சென்னை பிப்.20–

இந்தியா முழுவதும் சுமார் 57 கண்டோன்மெண்ட் பகுதிகளுக்கு தேர்தல் நடத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தியா முழுவதும் மத்திய அரசின் பாதுகாப்புத்துறை கட்டுப்பாட்டில் சுமார் 64 கண்டோன்மெண்ட் பகுதிகள் உள்ளன. இதில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும். இந்நிலையில் இந்தியா முழுவதும் சுமார் 57 கண்டோன்மெண்ட் பகுதிகளுக்கு தேர்தல் நடத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாட்டில் குன்னூர் வெலிங்டன் கண்டோன்மெண்ட் மற்றும்



சென்னை பல்லாவரம் ஆகிய 2 கண்டோன்மெண்ட் பகுதிகளில் வரும் ஏப்ரல் 30–ந் தேதி தேர்தல் நடத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள வெலிங்டன் கண்டோன்மெண்ட் பகுதியில் 7 வார்டுகள் உள்ளன. இந்த வார்டுகளில் 6 கவுன்சிலர்கள் மற்றும் ஒரு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனில் ரஷ்ய ராணுவம் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்துள்ளது – அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ்

ஜெர்மனி பிப்.20–

உக்ரைனில் பொதுமக்கள் மீது ரஷ்ய ராணுவம் மோசமான தாக்குதலை நடத்தியுள்ளதாக அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் குற்றம்சாட்டினார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் சுமார் ஓராண்டு காலமாக நீடித்து வருகிறது. இந்த போரில் இருதரப்பிலும் பெரும் உயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ராணுவ உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்கி வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ்,



ஜெர்மனி நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அங்குள்ள முனிச் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுபேசிய அவர், உக்ரைன் மீதான போரில் ரஷ்யா மிக மோசமான போர் குற்றங்களை செய்திருப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "உக்ரைனில் பொதுமக்கள் மீதுரஷ்யராணுவம்மோசமான தாக்குதலை நடத்தியுள்ளது. கொலை, பாலியல் பலாத்காரம், அடித்து துன்புறுத்துதல், மின்சாரம் பாய்ச்சுவது உள்ளிட்ட சித்ரவதைகளை ரஷ்ய ராணுவம் பொதுமக்கள் மீது நிகழ்த்தியுள்ளது. உக்ரைனில் இருந்து ஆயிரக்கணக்கான குழந்தைகள் ரஷ்யாவிற்கு வலுக்கட்டாயமாக நாடு கடத்தப்பட்டுள்ளனர். பல குழந்தைகள் தங்கள் குடும்பங்களிடம் இருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். போர் தொடங்கிய முதல் நாளில் இருந்தே ரஷ்ய ராணுவத்தின் அத்துமீறல்களை நாம் கவனித்து வருகிறோம். இது தொடர்பாக நமக்கு கிடைத்துள்ள ஆதாரங்கள், ரஷ்ய ராணுவம் உக்ரைனில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்துள்ளது என்பதை நிரூபிக்கின்றது." இவ்வாறு கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

## நீங்க யாராவது மோடியை பற்றி குறும்படம் எடுத்து விமர்சித்தால் உங்கள் வீட்டிலும் ரெய்டு வரும்

### முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சனம்

ஈரோடு பிப்.20–

அதிமுகவிற்கு சட்டாம் பிள்ளையே பாரதிய ஜனதா கட்சிதான். பாரதிய ஜனதா கட்சி எழு என்றால் எழுவார்கள். உட்கார் என்றார் உட்காருவார்கள் என்று சிதம்பரம் விமர்சித்தார்.

ஈரோட்டில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறியதாவது: நீங்க யாராவது மோடியை பற்றி குறும்படம் எடுத்து விமர்சித்தால் உங்கள் வீட்டிலும் ரெய்டு வரும். விமர்சனத்தையே சகித்துக் கொள்ள முடியாத அரசாக நரேந்திர மோடி அரசு உள்ளது. விமர்சனத்தையே சகித்துக்கொள்ள முடியாத அரசாட்சி நாடுகளின்



வரிசையில் இந்தியா சேர்ந்து இருக்கிறது. இதுவரை சீனா, ரஷ்யா, எகிப்து போன்ற நாடுகள்தான் அந்த வரிசையில் இருப்பதாக நினைத்தோம்.

இப்போது இந்தியாவும் அந்த வரிசையில் சேர்ந்து இருப்பதை உலகம் முழுவதும் அறிவித்து விட்டார்கள். மத்திய அரசு கொள்கை வேறு என்றால் அதிமுக ஏன் அங்கு இருக்கிறது. எந்த கொள்கையில் உடன்படுகிறீர்கள். எந்த கொள்கையில் வேறுபடுகிறீர்கள் என இரண்டு கட்சியும் சொல்லட்டும் ஒத்துக்கொள்கிறேன். எல்லா கொள்கைகளிலும் உடன்பட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதிமுகவிற்கு சட்டாம் பிள்ளையே பாரதிய ஜனதா கட்சிதான். பாரதிய ஜனதா கட்சி எழு என்றால் எழுவார்கள். உட்கார் என்றார் உட்காருவார்கள். மண்டியிடு என்றால் மண்டியிடுவார்கள். காலில் மல்லாந்து விழுந்து கும்பிடு என்றால் கும்பிடுவார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

## ஆவின் வெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்

சென்னை பிப்.20–

ஆவின் வெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆவின் நிறுவனம் வாயிலாக பால் மட்டுமின்றி, 225-க்கும் மேற்பட்ட பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் மோர், லஸ்ஸி, ஐஸ்கிரீம், நெய், இனிப்பு வகைகள் ஆகியவற்றை எல்லா தரப்பினரும் விரும்புகின்றனர். இந்த நிலையில், ஆவினில் வெண்ணெய்,பால்பவுடர்,நெய் உள்ளிட்ட உபபொருட்கள் தயாரிப்பு குறைந்துள்ளது. வெளி மாநிலங்களிலும் பால் பற்றாக்குறை நிலவுவதால், அங்கும்வெண்ணெய்தயாரிப்பு



குறைந்து, தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் விற்பனை இணையதளம் வாயிலாக வெளிமாநிலங்களில் இருந்து வெண்ணெய் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆவின் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதாவது, ஆவின் நிறுவனத்துக்கு தினமும் 5 முதல் 6 டன் வெண்ணெய் தேவைப்படும். தற்போது, தேவையான வெண்ணெய், பால் பவுடர் மட்டுமே உள்ளது. தேவைக்கு அதிகமாக இல்லை. எனவே, வெண்ணெய், பால் பவுடர் ஆகியவற்றை எதிர் கால இருப்புவைக்க முடியவில்லை. நாடுமுழுவதும் பால் உற்பத்தி குறைந்துள்ளது. தேவையை பூர்த்திசெய்ய வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் போது, பிரச்சனை சரியாகிவிடும். ஆவின் வெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெண்ணெய் தேவை அதிகரித்தால், வெளிமாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் என்று கூறினார்.

## தமிழகம் வந்த ஜனாதிபதி திரௌபதி முர்முவின் நீலகிரி பயணம் ரத்து

கோவை பிப்.20–

ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவியேற்ற பிறகு முதல் முறையாக நேற்று முந்தினம் தமிழகம் வந்தார்.

புதுடெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் நேற்று முந்தினம் மதுரைக்கு வந்த அவர், மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார். அதன் பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் மாலையில் கோவைக்கு வந்தார். மகா சிவராத்திரியை முன்னிட்டு ஈஷா யோகா மையத்திற்கு ஜனாதிபதி திரபுவதி முர்மு வந்தார். அவரை சத்குரு வரவேற்று, ஈஷா யோகா மையத்தை காரில் சுற்றி காட்டினார். ஜனாதிபதி முர்மு, தீர்த்த குளத்தை பார்வையிட்ட பின், தியான பீடத்தில் வழிபாடு செய்தார். பின்னர் ஆதியோகி முன்பு கோலாகலமாக மஹா சிவராத்திரி விழா தொடங்கியது. விழாவில் ஜனாதிபதி திரௌபதி மும்மு பங்கேற்றார்.

விழாவில் கவர்னர் ஆர். என்.ரவி, அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோரும்



பங்கேற்றனர். இந்த நிலையில், நேற்று (19–ந் தேதி) நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் ராணுவ மையத்துக்கு சென்று போர் நினைவுச் சின்னத்தில் ஜனாதிபதி திரௌபதி மும்மு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ஜனாதிபதி திரௌபதி மும்முவின் நீலகிரி பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மோசமான வானிலை மற்றும் பனிமூட்டம் நிலவுவதால் ஹெலிகாப்டரில் செல்ல முடியாத சூழல் இருப்பதால் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட்து. நண்பகல் 12 மணியளவில் கோவை விமான நிலையத்தில் இருந்து ஜனாதிபதி திரௌபதி முர்மு டெல்லி புறப்பட்டார்.

## மாமல்லபுரத்தில் இருந்து இந்தியாவின் முதல் ஹைபிரிட் ராக்கெட் 150 சிறிய ரக செயற்கைகோள்களுடன் விண்ணில் பாய்ந்தது

மாமல்லபுரம் பிப்.20–

அரசு பள்ளி மாணவர்கள் 3,500 பேர் இணைந்து தயாரித்த 150 சிறிய ரக செயற்கை கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன.

இந்தியாவின் முதல் ஹைபிரிட் ராக்கெட், நேற்று காலை 8.15 மணிக்கு செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் உள்ள பட்டிபுலம் கிராமத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. ஹைபிரிட் சவுண்ட் ராக்கெட் எனப்படுவது குறைந்த உயரத்தில் செலுத்தக் கூடியதாகவும், சோதனை ஓட்டத்திற்கு பயன்படுத்துவதற்காகவும், செயற்கைகோள்களின்



தரவுகளை சேகரிப்பதற்காகவும் அனுப்பப்படுகிறது. நேற்று விண்ணில் செலுத்தப்பட்டுள்ள ஹைபிரிட் சவுண்ட் ராக்கெட் சுமார் 2.4 கி.மீ. உயரம் வரை செல்லக் கூடியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ராக்கெட்டில் 6 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்கள் 3,500 பேர் இணைந்து தயாரித்த 150 சிறிய ரக செயற்கைகோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன. இந்தியாவின் முதல் ஹைபிரிட் சவுண்ட் ராக்கெட் இதுவாகும். இந்த நிகழ்வில் புதுச்சேரி துணைநிலை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதை நேரடியாக பார்வையிட்டனர். இன்று விண்ணில் ஏவப்பட்டுள்ள சிறிய ரக செயற்கைக்கோள்கள் மூலம் வானிலை, கதிர்வீச்சு தன்மை, வளிமண்டல நிலை உள்ளிட்ட பல்வேறு தரவுகளை பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசி செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி பட்டமளிப்பு விழா

தென்காசி பிப்.20–

தென்காசி அருள்மிகு செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 35-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இதில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள போதைப் பொருள் தடுப்பு அமைப்பின் தென் மண்டல இயக்குனர் அரவிந்தன் ஐ.பி.எஸ் அதிகாரி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தி, தேர்ச்சி பெற்ற 665 மாணவர்களுக்கு பட்டயங்கள் வழங்கினார். சிறப்பு விருந்தினர் பட்டமளிப்பு விழா உரையில் மாணவர்கள் சாதி, மத பேதமின்றி ஒழுக்கத்துடன் கூடிய தகுதியை வளர்த்துக் கொண்டு கல்லூரியில்



சிறந்து விளங்கியது போலவே சமுதாயத்திலும் சிறந்து விளங்க வேண்டும். மேலும் சமுதாயத்திற்கு பயன்பெறும் வகையில் நேர்மையுடன் பணியாற்ற வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

இவ்விழாவிற்கு கல்லூரி தலைவர் பாஸ்கர் தலைமையேற்று பேசும் போது மாணவர்கள் எப்பொழுதும் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்று கூறினார். கல்லூரி தாளாளர் கல்யாணி வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் சுந்தரராஜன் வரவேற்று கல்லூரியின் தேர்ச்சி நிலை, என்.சி.சி, என்.எஸ்.எஸ் மற்றும் வேலைவாய்ப்பில் கல்லூரியின் சாதனைகள் குறித்து பேசினார். பட்டமளிப்பு விழா வழிமுறைகள் குறித்து கல்லூரியின் நிர்வாக அதிகாரி மணிகண்டன் எடுத்துக் கூறினார். இவ்விழா ஏற்பாடுகளை அனைத்துதுறை தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் செய்திருந்தனர்.

## ஆலங்குடி அருகே தாத்தா துக்கத்துக்கு வந்த பேரன் மின்சாரம் தாக்கி பலி 3 பேர் படுகாயம்

ஆலங்குடி பிப்.20–

ஆலங்குடி அருகே தாத்தா துக்கத்திற்கு வந்த பேரன் மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார். மேலும், 3 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள கல்லாலங்குடியைச் சேர்ந்த தச்சு தொழிலாளி ஆறுமுகம்(90). இவர், வயது முதிர்வு காரணமாக உயிரிழந்தார். இந்நிலையில், உறவினர்கள் கடந்த வெள்ளியன்று மாலை 6 மணியளவில் அடக்கம் செய்துள்ளனர். இந்நிலையில், இவரது மகளான புதுக்கோட்டை மாவட்டம், வயலோகம் கிராமத்தைச் சேர்ந்த பானுமதி மகன் பாலசுப்பிரமணியன்(13) குளிப்பதற்காக, தாய்மாமனான சௌந்தர் வீட்டில் இருந்த மின் மோட்டாரின் சுவிட்சை போட்டுள்ளார். அப்போது மின் கசிவு காரணமாக மின்சாரம் பாய்ந்து தூக்கி வீசப்பட்ட பாலசுப்பிரமணியன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.



சத்தம் கேட்டு அங்கு வந்த சௌந்தர் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் இளவரசி (40) பாலசுப்ரமணியனை தூக்கி உள்ளார். அப்போது, மின்சாரம் தாக்கி அலறிய இளவரசியின் சத்தம் கேட்டு வந்த இவரது குழந்தைகள் லெனின் (21), ஜான்சி (20) ஆகியோரையும் மின்சாரம் தாக்கியுள்ளது. இதில் படுகாயம் அடைந்த, இளவரசி, லெனின் மற்றும் ஜான்சியை அக்கம் பக்கத்தினர் மீட்டு ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக, லெனின் மற்றும் ஜான்சி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இது குறித்து ஆலங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தாத்தா துக்கத்திற்கு வந்த பேரன் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# சிறுவாபுரி கோவில்களில் மகா சிவராத்திரி விழா சிறப்பு பூஜைகள் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது

ஊத்துக்கோட்டை, பிப். 20 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சிறுவாபுரியில் உள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் உள்ள அண்ணாமலையார் - உண்ணாமலை அம்மன் சன்னதியில் மகா சிவராத்திரியை முன்னிட்டு 4 கால பூஜைகள் நடைபெற்றது.

இக்கோவில் வளாகத்தில் சென்னை ஸ்ரீ நிருத்யஷேத்ரா நாட்டிய திலகம், லட்சுமி ராவ் குழுவினரின் நாட்டியம், சென்னை, செங்குன்றம், தில்லை நாட்டியாஞ்சலி டான்ஸ் அகாடமி சுபஸ்ரீ கார்த்திகேயன் குழுவினரின் நாட்டியம், செங்கல்பட்டு மாவட்டம், விநாயகா நாட்டியாலயா, ஆடல் கலைமணி, நாட்டிய மயூரி மீனாட்சி பிரியா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதன் பின்னர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து



கலைஞர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளுக்கு, கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். கோயிலின் தலைமை குருக்கள் ஆனந்தன், ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சி ராணி ராஜா, துணை தலைவர் சேகர், ஒன்றிய கவுன்சிலர் சந்துரு, சிவனடியார் கிஷோர் குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஹரி முதலியார், பாஜக தமிழக அரசு தொடர்பு பிரிவு மாநில தலைவர் அழிஞ்சிவாக்கம் எம்.பாஸ்கரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர், நாட்டிய நிகழ்ச்சியை கண்டு களித்தனர்.

அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு கோவில் முழுவதும் வண்ண விளக்குகள் மற்றும் மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. உற்சவர் மற்றும் மூலவருக்கு 4 கால பூஜைகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சிறுவாபுரி மற்றும் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சியில், கலந்து கொண்ட பக்தர்களுக்கு திருக்கோவிலின் சார்பாக பிரசாதம் வழங்கப்பட்டது.

# செயற்கை கோள்களை உருவாக்கிய மாணவ, மாணவிகளுக்கு புதுச்சேரி ஆளுநர் தமிழிசை பாராட்டு

மாமல்லபுரம், பிப். 20 -

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் செயற்கைக்கோள் ஏவு வாகன திட்டம் 2023 மூலம் நாட்டின் முதலாவது உயர்ரக ராக்கெட் ஏவுதல் நிகழ்ச்சி மகாபலிபுரம் - தேவனாறு கிராமத்தில், டி.டி.டி.சி. மைதானத்தில் நடைபெற்றது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராக நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் மேனாள் விஞ்ஞானி மற்றும் செயற்கைக்கோள் மையத்தின் இயக்குனர் பத்மஸ்ரீ டாக்டர். மயில்சாமி அண்ணாதுரை, இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானி டாக்டர். பாலசுப்பிரமணியன் வெங்கட்ராமன், இஸ்ரோ யூ.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்தின் துணை இயக்குனர் டாக்டர் எஸ். வெங்கடேஷ்வர ஷர்மா, இராமேஸ்வரம், டாக்டர் ஏ.பி. ஜே. அப்துல் கலாம் சர்வதேச அமைப்பின் மேலாண் நிர்வாகி டாக்டர் ஏ.பி. ஜே.எம். நசீமா மறைக்காயர், ஸ்பேஸ் ஜோன் இந்தியா



நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ஆனந்த் மகாலிங்கம், விஞ்ஞானிகள் உள்ளிட்ட ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர், அறிவின் மூலம் உலகத்தில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்று கூறிய டாக்டர் ஏ.பி.ஜே .அப்துல் கலாமின் கனவை நனமாக்கும் வகையில் இந்த செயற்கைக்கோள் திட்டம் அமைந்திருக்கிறது. நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 5000 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணித செயல்பாடுகள் மூலமாக 150 சிறிய வகை செயற்கை கோள்களை உருவாக்கி இருப்பதற்காக எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இதில் பெரும்பாலானவர்கள் அரசு பள்ளிகளை சேர்ந்தவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த திட்டத்தில் பணியாற்றி உள்ள விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், சூழலியல் வல்லுநர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த மார்ட்டின் பவுண்டேஷன் அமைப்பிற்கும் டாக்டர் ஏ.பி. ஜே .அப்துல் கலாம் சர்வதேச அமைப்பிற்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே நடைபெற்ற இந்த திட்டத்தின் தொடக்க விழாவிலும் நான் பங்கேற்றது எனக்கு மகிழ்ச்சி தருகிறது என்றார்.

## தண்ணீருக்காக அல்லல்படும் மக்கள்

# வரலாறு நாளிதழ் செய்தி எதிரொலியாக மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து. தண்ணீர் அளிக்க உறுதி



வனத்துறையினர் அட்டூழியத்திற்கு தீர்வு காணுமாறு ஆட்சியர் காலில் விழுந்து காடுவெட்டி கிராம மக்கள் கோரிக்கை

சீர்காழி, பிப்.20-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே கொள்ளிடம் ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள அளக்குடி ஊராட்சி காடுவெட்டி கிராமம். இங்கு நூறுக்கும் மேற்பட்ட விவசாய கூலி தொழிலாளர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இந்த கிராமத்தில்நிலத்தடிநீர் உப்பாக மாறிவிட்டதால் அதனை குடிநீர் உள்ளிட்ட எவ்வித பயன்பாட்டிற்கும் பயன்படுத்த முடியாது நிலை உருவாகியுள்ளது. கொள்ளிடம் ஆற்றின் கரையில் இந்த கிராமம் இருந்தும் கூட, கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்திலும் முறையாக தண்ணீர் வழங்காமல், நான்கு நாட்களுக்கு ஒரு முறையும், சில சமயங்களில் பல நாட்களுக்கு தண்ணீர் வராத நிலையும் இருந்து வருகிறது.

இதனால் கிராமத்து பெண்கள் தலையிலும், சிறுவர்கள் சைக்கிளில் குடங்களை கட்டி கொண்டும் அடுத்த கிராமங்களில் தண்ணீர் தேடி செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மழை காலத்தில் மக்கள் தண்ணீர் எடுப்பதில் பெரும் சிரமம் நிலவி வருவதாகவும், இதனால் இங்குள்ள குடும்பங்களுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் வீட்டிற்கு தேவையான தண்ணீர் பிடிப்பதிலே நேரம் கடந்து கால தாமதமாக படிக்க செல்ல வேண்டி உள்ளதாகவும் வேதனை படுகின்றனர். இந்த கிராமம் கொள்ளிடம் ஆற்றின் கரையை ஒட்டியே அமைந்திருந்தும் எந்த பயனும் இல்லை. ஏன் என்றால்? கடல் நீர் உட்புகுந்து கொள்ளிடம் ஆற்று நீரும் முற்றிலும் உப்பாக மாறியதால் ஆற்று நீரை கூட பயன்படுத்த முடியாத அவல நிலை உள்ளது.

தண்ணீருக்காக தினமும் அல்லல் படும் தங்களுக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தில் தினந்தோறும் தண்ணீர் வழங்க வேண்டுமெனவும், அரசுக்கு இந்த கிராமமக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேலும், காடுவெட்டி கிராமத்தில் தண்ணீர் பஞ்சம் அதிகளவில் நிலவுவதால் ஆடு, மாடுகளை வைத்து தங்கள் வாழ்வாதாரத்தை நடத்தும் மக்கள் கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் தவித்து வருகிறது.

இதனை உடனடியாக தமிழ்நாடு அரசும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரும் தனி கவனம் செலுத்தி, இக்கிராமத்திற்கு தினந்தோறும் குடிநீர் கிடைக்க வழிசெய்யவேண்டும்எனகிராம மக்கள் கோரிக்கை வைத்தனர். இதனை கடந்த பிப்ரவரி 7 -ம் தேதி வரலாறு நாளிதழ் செய்தியாக வெளியிட்டது.

இதனை கண்ட மாவட்ட ஆட்சியர் அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கும் விதமாக காடுவெட்டி கிராமத்திற்கு துறை சார்ந்த அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அங்குள்ள நீர் ஆதாரங்களை பார்வையிட்டு உடனடியாக கிராம மக்களின் நீண்டகால தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண உத்தரவிட்டார். இதனை அடுத்து வரலாறு நாளிதழுக்கு கிராம மக்கள் நன்றியினை தெரிவித்தனர்.

## 2023 ஐபிஎல் மேட்ச்

# சென்னை சூப்பர் கிங்ஸ் அட்டவணை

ஐபிஎல் 2023 தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முழு அட்டவணை இதோ:



1. மார்ச் 31, இரவு 7.30 : குஜராத் டைட்டன்ஸ் V சென்னை சூப்பர் கிங்ஸ், அகமதாபாத்.
2. ஏப்ரல் 3, இரவு 7.30 : சென்னை சூப்பர் கிங்ஸ் V லக்னோ சூப்பர் ஜெயின்ஸ், மும்பை.
3. ஏப்ரல் 8, இரவு 7.30, மும்பை இந்தியன்ஸ் V சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை.
4. ஏப்ரல் 12, இரவு 7.30, சென்னை சூப்பர் கிங்ஸ் V ராஜஸ்தான் ராயல்ஸ், சென்னை.
5. ஏப்ரல் 17, இரவு 7.30, ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு V சென்னை சூப்பர் கிங்ஸ், பெங்களூரு.
6. ஏப்ரல் 21, இரவு 7.30, சென்னை சூப்பர் கிங்ஸ் V சன் ரைசர்ஸ் ஹைதராபாத், சென்னை.
7. ஏப்ரல் 23, இரவு 7.30, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் V சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா.
8. ஏப்ரல் 27, இரவு 7.30, ராஜஸ்தான் ராயல்ஸ் V சென்னை சூப்பர் கிங்ஸ், ஜெய்ப்பூர்.
9. ஏப்ரல் 30, மதியம் 3.30, சென்னை சூப்பர் கிங்ஸ் V பஞ்சாப் கிங்ஸ், சென்னை.
10. மே 4, மதியம் 3.30, லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் V சென்னை சூப்பர் கிங்ஸ், லக்னோ.
11. மே 6, மதியம் 3.30, சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ், சென்னை.
12. மே 10, இரவு 7.30, சென்னை சூப்பர் கிங்ஸ் V டெல்லி கேப்பிடல்ஸ், சென்னை.
13. மே 14, இரவு 7.30, சென்னை சூப்பர் கிங்ஸ் V கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை.
14. மே 10, மதியம் 3.30, டெல்லி கேப்பிட்டல்ஸ் V சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி.



இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் புதுச்சேரி மாநிலத் தலைவர் டாக்டர். எஸ்.ஆனந்த்குமார், நேற்று சென்னை எழும்பூரில் ஈசன் முருக சாமி தலைமையிலான தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் நடத்தும் விவசாயிகள் மாநாட்டில் பாரதிய கிசான் யூனியன் தலைவர் ராக்கேஷ் திக்காயத் மற்றும் தில்லி விவசாய போராட்ட ஒருங்கிணைப்பாளர் யுத்வீர் சிங் ஆகியோரோடு பல விவசாயிகள் கலந்துகொள்கிறார்.இந்த மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது



வேலூர் டார்லிங் ரெசிடென்சியில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு பொதுக்குழு கூட்ட முப்பெரும் விழா மற்றும் தமிழர் திருநாள் விருது, வணிகச் செம்மல் விருது வழங்கும் விழா மாநில தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா மற்றும் மாவட்ட நிர்வாகிகள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வி.ஐ.டி. வேந்தர் விஸ்வநாதன் மற்றும் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் கலந்து கொண்டு கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என சிறப்புரையாற்றினர்.



பெங்களூரில் இருந்து பாகல்பூர் செல்லும் ரயிலில் பயணம் செய்து வந்த நேஹாகுமாரி என்பவருக்கு வண்டி ஜோலார்பேட்டை கடந்து வாணியம்பாடி வரும் பொழுது அழகான பெண் குழந்தை சக பெண் பயணிகள் உதவியுடன் பிறந்துள்ளது. அவர்களை காட்பாடி ரயில் நிலையத்தில் உள்ள சிஎம்சி டெஸ்க் மருத்துவர்கள் உதவியுடன் பெண் காவலர்கள், சந்திரசேகர், பத்மராஜ் ஆகியோருடன் சென்று அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து நல்ல முறையில் இறக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் காட்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிகழ்வினை ரயில் பயணிகள் வெகுவாக பாராட்டினர். இதை அறிந்த ரயில்வே காவல்துறை உயர் அதிகாரிகள் வனிதா, விஜயகுமார் பிரசவித்த பெண்ணுக்கு உதவிய காவலர்களை வெகுவாக பாராட்டி வெகுமதி அளிக்க இருக்கிறார்கள்.

# வேலூர் குடியாத்தம் ஸ்ரீ அபிராமி பள்ளியில் 4 ஆம் ஆண்டு விழா

வேலூர், பிப். 20 -

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கீலாலத்துரிலுள்ள ஸ்ரீ அபிராமி பள்ளியில் 4 ஆம் ஆண்டு விழா பள்ளி தாளாளர் எம்.என். ஜோதிகுமார் தலைமையில் நடைபெற்றது.




இவ்விழாவிற்கு பள்ளி துணைத்தலைவர் எம்.பிரகாசம், நிர்வாக அலுவலர் கே.முருகவேல், பள்ளி அறங்காவலர்கள், பள்ளி முதல்வர் லதா ஜேக்கப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் அனைத்து மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் நடப்பு கல்வி ஆண்டில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்து விருதுகளை வழங்கினர். சென்னையில் நடந்த அமெரிக்கன் புக் அப் வேர்ல்டு ரெக்கார்டில் பங்குபெற்று பரிசு வென்ற மாணவர்களை விழாவில் கௌரவித்தனர்.

இவ்விழாவை சிறப்பூட்டும் வகையில் பள்ளி மாணவர்களின் தேசப்பற்று நடனமும், பன்மொழி நடனங்களும், ஒற்றுமையைப் பறைசாற்றி பார்வையாளர்களின் மனதைவெகுவாகஈர்த்தது. பள்ளி முதல்வர் லதா ஜேக்கப்மற்றும்ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து தேசிய கீதம் பாட விழா முடிவடைந்தது.

# பெருமாள்குப்பம் ஸ்ரீ ராக்கநைனார் திருக்கோவிலில் 8-ம் ஆண்டு மகா சிவராத்திரி விழா

ஊத்துக்கோட்டை, பிப். 20 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி, பெருமாள் குப்பம், சாமியார் குல ஆண்டவர் கோவில் தெருவில் புகழ்மிக்கஸ்ரீ ராக்கநைனார் திருக்கோவில் ஒன்று உள்ளது. இக்கோவிலில் 8-ம் ஆண்டுஸ்ரீ மகா சிவராத்திரி விழா நடைபெற்றது.



இதை முன்னிட்டு சனிக்கிழமை காலை கோ பூஜை, வலம்புரி மகா கணபதி பூஜை, பக்தர்களின் கைகளால் சதா கால அபிஷேகம், மோட்சத்திற்கான பூஜைகள் உள்ளிட்டவை நடைபெற்றது. மாலை கோவில் வளாகத்தில் சிலம்பம்-கராத்தேவீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து மகா சிவ ருத்ராட்சம் சகலானந்தா சுவாமிகள் கரங்களால் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் பின்னர், இரவு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து குலதெய்வ குருபூஜைவிழா நடைபெற்றது.

பின்னர், தூப- தீப ஆராதனை, பஜனை நிகழ்ச்சிகள், விளக்கு பூஜைகள், கூட்டு பிரார்த்தனை, சுவாசப் பயிற்சி, யோகாசனம், தியானம், பிரம்ம ஞானம் உள்ளிட்டவைநடைபெற்றது. நாலு காலம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பெருமாள் குப்பம்கிராமத்தைச்சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# கொள்ளிடம் அருகே புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் 33 ஆண்டுகளுக்கு முன்பு படித்த முன்னாள் மாணவர்கள் நெகிழ்ச்சி சந்திப்பு

கொள்ளிடம் பிப் 20.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புத்தூர் சீனிவாசா சுப்பராயா அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த 1987 ஆம் ஆண்டிலிருந்து 90 ஆம் ஆண்டு வரை சிவில், எலக்ட்ரிக்கல், மற்றும் மெக்கானிக்கல் ஆகிய பாடப்பிரிவுகளில் மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சேலம், திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இருந்துஇங்குவந்துஉ கல்வி பயின்ற மாணவர்கள் ஒவ்வொருவரும்தமிழ்நாடு, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளிலும் சென்று வேலை பார்த்து வருகின்றனர்.



அதில் பலர் சிறந்த வல்லுனர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் இருந்து வருகின்றனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு 160 மாணவர்கள் படிப்புகளைமுடித்துவிட்டு வெளியே சென்றவர்கள் 33 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இதே கல்லூரியில், படித்த வகுப்பறையிலேயே சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கல்லூரி முதல்வர் முனைவர் தங்கமணி தலைமை வகித்தார். முன்னாள் மாணவர்கள் பயின்ற விதம், பிறகு படிப்படியாக முன்னேறி வெளியூர்களுக்கு சென்று திறம்பட வாழ்க்கையை நடத்தி வருகின்ற விதம் குறித்தும்ஒவ்வொருவரின் வாழ்க்கை அனுபவங்கள் குறித்தும் கருத்துக்களை நெகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினர்.

முன்னாள் மாணவர்கள் 33 ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்துஒருவருக்கொருவர் கருத்துக்களையும், அனுபவங்களையும் எடுத்துக் கூறியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர் தங்கமணி பேசுகையில், இங்கு வந்து பயிலும் அனைத்து மாணவருக்கும் வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது.

புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரி பிளேஸ்மென்டில் முதலிடம்பெற்று திகழ்ந்து வருகிறது.


தமிழ்நாட்டில் உள்ள 53 அரசு தொழில்நுட்ப கல்லூரிகளில் ஆறு கல்லூரிகள் சிறப்பான கல்லூரிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரி முதலிடம் பெற்று திகழ்கிறது. சென்ற வாரம் அதற்கான பயிற்சி பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டதுஎன்றார்.

# தொடர்ந்து 4-வது முறையாக பார்டர்-கவாஸ்கர் கோப்பையை தக்கவைத்த இந்தியா

டெல்லி, பிப்.20-

2-வது டெஸ்ட்டில் ஆஸ்திரேலியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடர் நடைபெற்று வருகிறது.முதல்டெஸ்ட்டில் இந்தியா வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து இரு அணிகளுக்கு இடையேயான 2-வது டெஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா 263 ரன்களுக்குள் ஆல் அவுட் ஆனது. இதனை தொடர்ந்து



முதல் இன்னிங்சில் களமிறங்கிய இந்தியா 262 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதையடுத்து, ஆஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. ஆனால், இந்திய அணியின் அபார பந்து வீச்சால் ஆஸ்திரேலியா 113 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதனால், 115 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய இந்தியா 4 விக்கெட்டுகளை இழந்து 118 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் 2-வது டெஸ்ட்டில் ஆஸ்திரேலியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதன் மூலம் பார்டர் கவாஸ்கர் கோப்பையை இந்தியா தொடர்ச்சியாக 4-வது முறையாக தக்கவைத்துக் கொண்டது. பார்டர்-கவாஸ்கர் கோப்பையை தக்க வைத்துள்ள இந்தியாவுக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது.

# அறந்தாங்கி அருகே கோவில் திருவிழாவை முன்னிட்டு மாட்டுவண்டி எல்கை பந்தயம்

அறந்தாங்கி , பிப்.20-

அறந்தாங்கி அருகே கூகனூர் அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் மஹா சிவராத்திரி விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே கூகனூர் அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் மஹா சிவராத்திரி விழாவை முன்னிட்டு இரண்டாம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

போட்டியில் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை இராமநாதபுரம் சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட மாடுகள் போட்டியில் கலந்து கொண்டன. இதில் பெரியமாடு, கரிச்சான்மாடு, புதுப்பூட்டு என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற போட்டியை தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். கணேசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மூன்று பிரிவுகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட இரட்டை மாட்டுவண்டிகள் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி ஒன்றையொன்று முந்திச் சென்றன. போட்டியில் வெற்றி பெற்ற ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாட்டின் உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ 2 லட்சம் ரொக்கப்பரிசும் கோப்பைகளும் வழங்கப்பட்டது.

பந்தைய நிகழ்ச்சியை சாலையின் இரு புறமும் நின்று ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டு ரசித்தனர். பாதுகாப்பு பணியில் நாகுடி போலீசார் ஈடுபட்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் பகுதியில் ஏராளமான திருமண மண்டபங்கள் உள்ளன. இங்கு உணவுக்காக நூற்றுக்கணக்கான நாய்கள் தெருவில் சுற்றி திரிகிறது. இந்த நாய்கள் வருவோர் போவோரை விரட்டிக் கடிப்பது மட்டுமின்றி, காடுகளுக்கு மேய செல்லும் 50 க்கு மேற்பட்ட ஆடுகளை கடித்துள்ளது. எனவே நாய்களை பிடிக்க ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மதுரை கென்னட் மருத்துவமனை வளாகத்தில "ஐ பாம்பு" என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் காக்கைக்கூடு பதிப்பாசிரியர் செழியன் சிறப்புரையாற்றினார். வெளிநாடுகளுக்குச் சென்று பாம்புகளை பிடித்தமைக்காக பத்மஸ்ரீ விருது பெறப்போகும் வடிவேல் கோபால், மாசி சடையன், இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி வரும் காளி, தொகுப்பாளர் நிலா பாண்டியன்,விஸ்வநாதன லட்சுமி, முனைவர்கள் கணேஷ், தணிகைவேல், முன்னிலை விஷ்வா போன்றவர்களும் இவ்விழாவை சிறப்பிக்கப்பட்டனர்.

# ஜப்பானில் விழுந்த வடகொரியா ஏவுகணையால் பரபரப்பு

ஜப்பான், பிப்.20-

வடகொரியா ஏவிய ஏவுகணை ஜப்பானின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் விழுந்துள்ளதாக ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா தெரிவித்துள்ளார்.

வடகொரியா தன்னிடம் இருக்கும் அணு ஆயுதங்களை கொண்டு பிராந்திய எதிரி நாடுகளான தென்கொரியா மற்றும் ஜப்பானை நீண்டகாலமாக அச்சுறுத்தி வருகிறது. மேலும் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பகிரங்கமாக பல்வேறு ஏவுகணை சோதனைகளையும் வடகொரியா நடத்தி வருகிறது. இந்நிலையில்



வடகொரியா ஏவிய ஏவுகணை, ஜப்பானின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் விழுந்துள்ளதாக ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஏவுகணை கிழக்கு கடற்கரையில் இருந்து ஹொக்கைடோ மாகாணத்தின் மேற்கு ஒஷிமா தீவு அருகே விழுந்ததாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து தென் கொரிய ராணுவம் தெரிவித்துள்ள தகவலின்படி, அதிகாலை 5.21 மணிக்கு ஏவப்பட்ட ஏவுகணை, 66 நிமிடங்கள் வானில் பறந்து 6.27 மணிக்கு கடலில் விழுந்ததாகவும், சுமார் 200 கிலோ மீட்டர் தொலைவு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை சோதனையானது வடகொரியாவின் எதிர்தாக்குதல் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனவும், கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் வகையிலான ஏவுகணை முழு திறனை எட்டியிருப்பது உறுதியாகி இருப்பதாகவும் வடகொரியா அரசின் உயர்மட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஜப்பான் நாட்டின் ஆய்வு கப்பல் அருகே சீன கடற்படை ஹெலிகாப்டர் பறந்து சென்ற நிலையில் சீனாவுக்கு ஜப்பான் எச்சரிக்கை

ஜப்பான் பிப்.20-

ஜப்பான் நாட்டின் ஆய்வு கப்பல் அருகே சீன கடற்படை ஹெலிகாப்டர் பறந்து சென்ற நிலையில், சீனாவுக்கு ஜப்பான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு சீன கடற்பகுதியில் ஜப்பானிய கடலோர பகுதியில் 370 கி.மீ. தொலைவுக்கு அந்நாட்டுக்கான சிறப்பு பொருளாதார மண்டல பகுதி உள்ளது. தங்களது பகுதிக்கு உட்பட்ட அந்த இடத்தில் ஜப்பானின் ஆராய்ச்சி கப்பல் இயங்கி கொண்டிருந்தது.

இந்நிலையில், சீனாவின் கடற்படையை சேர்ந்த ஹெலிகாப்டர் ஒன்று, ஜப்பானின் ஆய்வுக்கப்பலை உளவு பார்க்கும் வகையில், பறந்து சென்று உள்ளது என கூறப்படுகிறது.

இதனை ஜப்பானின் மீன்வள கழகம் தெரிவித்து உள்ளது. அந்த ஹெலிகாப்டர், மீன்வள ஆராய்ச்சி மற்றும் கல்வி கழகத்தின் யோகோ மாரு பகுதியின் பின்னால் இருந்து வந்து, கப்பலை 150-200 மீட்டர் நெருக்கத்தில் அணுகியுள்ளது. ஒகினாவா பகுதியின் வடமேற்கே கடல் பரப்பில் இருந்து 30 மீட்டர் உயரத்தில் பறந்த அந்த ஹெலிகாப்டர் பின்னர், வேறு இடத்திற்கு சென்றது என ஜப்பானில் இருந்து வெளிவரும் கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. சீனாவின் இந்த செயல் வருத்தத்திற்கு உரியது என்று கூறியதுடன், இது போன்ற செயல்களில் மீண்டும் அந்நாடு ஈடுபட கூடாது என சீனாவுக்கு ஜப்பான் அரசு எச்சரிக்கையும் விடுத்து உள்ளது.

# குளமங்கலம் கோவில் குதிரை சிலைக்கு காகிதப்பூ மாலை கட்டும் பணி தொடக்கம்

ஆலங்குடி பிப்.20-

கீரமங்கலம் அருகே உள்ள குளமங்கலம் கிராமத்தில் வில்லுனி ஆற்றங்கரையில் பிரசித்தி பெற்ற பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவில் உள்ளது. இங்கு ஆசியாவின் மிக உயரமான குதிரை சிலை அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் மாசிமக திருவிழா நடைபெறுவது வழக்கம். அப்போது 35 அடி உயர பிரமாண்ட குதிரை சிலைக்கு அதே உயரத்தில் காகிதப்பூ மாலைகளை பக்தர்கள் காணிக்கையாக அணிவிப்பது வழக்கம்.



கிராமத்தின் சார்பில் மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக வந்து முதல் மாலையாக மலர் மாலை அணிவித்த பிறகு, மலர்கள், பழங்களால் கட்டப்பட்ட மாலைகள் வாகனங்களில் ஏற்றி வந்து அணிவிப்பார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மாலைகள் குதிரை சிலைக்கு அணிவிக்கப்படுவதால் அதனைக் காண பக்தர்களின் கூட்டம் அலைமோதும். இதையொட்டி பக்தர்களின் வசதிக்காக சிறப்பு பஸ் வசதிகளும், மருத்துவ வசதி, தீயணைப்பு வாகனம், ஆம்புலன்ஸ் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

இந்த ஆண்டு மாசிமக திருவிழா வருகிற 6-ந் தேதி தொடங்குகிறது. இதையொட்டி கீரமங்கலம், கொத்தமங்கலம், குளமங்கலம், மறமடக்கி, ஆவணத்தான்கோட்டை, திருநாளூர், திருச்சிற்றம்பலம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் குதிரை சிலைக்கு காகிதப்பூ மாலை கட்டும் பணிகளை தொடங்கியுள்ளனர். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பிளாஸ்டிக் மாலைகள் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். மீறி பிளாஸ்டிக் மாலைகள் கொண்டு வந்தால் குதிரை சிலைக்கு அணிவிக்க அனுமதி இல்லை என்று கடந்த சில ஆண்டுகளாக கோவில் நிர்வாகத்தின் சார்பில் கூறப்பட்டுள்ளதால் இந்த ஆண்டு முழுமையாக வண்ண வண்ண காகிதங்களை மட்டுமே பயன்படுத்தி பிரமாண்ட மாலைகள் கட்டப்பட்டு வருகிறது.

# உளுந்தூர்பேட்டையில் அங்காளம்மன் மயான கொள்ளை திருவிழா



கள்ளக்குறிச்சி, பிப்,20_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில், உள்பேட்டை தெருவில் உள்ள அங்காளம்மன் மற்றும் பாளையப்பட்டு தெருவில் அமைந்துள்ள அங்காளம்மன் கோவில் மயான கொள்ளை திருவிழா சிறப்பு அலங்காரத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

உளுந்தூர்பேட்டையில் இவ்விரு அங்காளம்மன் கோவில்களும் மிகவும் பிரசித்தி பெற்ற கோவில்கள் ஆகும், இந்த கோவில்களின் திருவிழா, கடந்த 14-ம் தேதியன்று காப்புகட்டி, கொடியேற்றத்துடன் விழா துவங்கியது.

ஒவ்வொரு நாளும் ஒரு உற்சவதாரர் தலைமையில் அம்மனுக்கு சிறப்பு அலங்காரத்தில் வீதி உலா வரும், . இதில் உற்சவதாரர்கள் அவர்களின் நேர்த்தி கடனை செலுத்தும் வகையில் அம்மனுக்கு பூ, பழம், காய்கள், மற்றும் ஆபரணங்களால் அலங்கரித்து வானவேடிக்கை, கலைநிகழ்ச்சி நடத்தி வீதி உலா வருவது வழக்கம்,

இதனைத் தொடர்ந்து முக்கிய விழாவான மயான கொள்ளை விழா இன்று நடைபெற்றது, இரண்டு அங்காளம்மன்களும் அலங்காரம் செய்யப்பட்டு நகரம் முழுவதும் வீதி உலா நடைபெற்றது, அப்போது பக்தர்கள் அம்மன் வேடம் மற்றும் காளி வேடம் அணிந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள், இறுதியில் இரண்டு அங்காளம்மன்களும் ஒரே இடத்தில் சந்தித்து, பிறகு வெவ்வேறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மயான கொள்ளை திருவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் உளுந்தூர்பேட்டை பகுதியை சுற்றியுள்ள சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து பக்தர்கள் வந்து கலந்து கொண்டனர். இவ்விழாவில் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, விழுப்புரம் சரக காவல்துறை துணைத் தலைவர் பாண்டியன் மேற்பார்வையில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மோகன்ராஜ், மற்றும் விழுப்புரம், கடலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் தலைமையில் காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# புதுக்கோட்டை அருகே கஞ்சா கடத்திய கிராம நிர்வாக அலுவலர் உட்பட மூன்று பேர் கைது

புதுக்கோட்டை

புதுக்கோட்டை அருகே காரில் கஞ்சா கடத்தி விற்பனை செய்த ஒரு கிராம நிர்வாக அலுவலர் உட்பட மூன்று பேரை தனிப்படை போலீசார் கைது செய்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் கத்தக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த ஜெயரவி வர்மா என்பவர் கோவிலூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறார். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரால் அமைக்கப்பட்ட உதவிக் காவல் ஆய்வாளர் பாலமுருகன் தலைமையிலான தனிப்படை போலீசார் புதுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது கிராம நிர்வாக அலுவலர் ஜெயரவி வர்மாவின் கார் அந்த வழியாக வந்துள்ளது. அந்த காரை போலீசார் தடுத்து நிறுத்தி சோதனை நடத்திய போது அதில் இருந்த விஏஓ ஜெயம் ரவி வர்மா உள்ளிட்ட மூவர் முன்னுக்கு பின்னான பதிலை கூறியதையடுத்து அந்த காரை போலீசார் சோதனையிட்டுள்ளனர்.

அப்போது அந்த காருக்குள் ஒரு கிலோ 700 கிராம் கஞ்சா பொட்டலங்கள் இருப்பது தெரிய வந்தது.இதனையடுத்து கிராம நிர்வாக அலுவலர் ஜெயரவி வர்மா மற்றும் அவருக்கு உதவியாளராக செயல்பட்ட ஆத்தங்குடியைச் சேர்ந்த கணேசன் அதேபோல் மதுரையில் இருந்து கஞ்சா வாங்கி வந்து கொடுக்கும் வேலையில் ஈடுபட்ட காரைக்குடியை சேர்ந்த சூர்யா ஆகிய மூவரையும் போலீசார் கைது செய்தனர். மேலும் காரில் இருந்த ஒரு கிலோ 700 கிராம் கஞ்சா பொட்டலங்கள் 3 செல்போன்கள் ஒரு கார் உள்ளிட்டவற்றையும் போலீசார் பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டனர். அரசு ஊழியரான கிராம நிர்வாக அலுவலர் கஞ்சா கடத்தி கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் புதுகை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கடையநல்லூரில் இந்திய யூனியன் முஸ்லிம் மாநாடு ஆலோசனைக் கூட்டம்

தென்காசி பிப்.20-

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 75-ஆம் ஆண்டு பவள விழா, அகில இந்திய மாநாடு ஆலோசனை, விளக்க கூட்டம் முஸ்லிம் லீக் அலுவலகத்தில் நகர தலைவர் பி.ஏ.செய்யது மசூது தலைமையில் துவங்கியது.




கிராஅத் அப்துல் மஜீத் ஆலிம் ஓதினார். நகர செயலாளர் அய்யூப் கான் வரவேற்றார். தென்காசி மாவட்ட பொருளாளர் பாம்புக் கோவில் இப்ராஹிம், நல்லாசிரியர் கே.எம்.செய்யது மசூது, எம்.ஏ.செய்யது இஸ்மாயில், யு.டி முகம்மது துராப்ஷா, எம்.எஸ். சிந்தாமதார், நகர துணைத் தலைவர்கள் பி.ஏ.முகம்மது இஸ்மாயில், ஏ.கே. முஸ்தபா ஆசிரியர்,இந்தி மசூது ஆசிரியர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில முஸ்லிம் லீக் ஆணைப்படி பங்கேற்ற மாநில துணைத் தலைவர் எஸ்.எம்.கோதர் மைதீன் எக்ஸ்.எம்.எல்.ஏ, இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில துணைத் தலைவருமான கே.நவாஸ்கனி எம்.பி, மாநில அமைப்பு செயலாளர் நெல்லை கே.கே.அப்துல் மஜீத் , மாநில முஸ்லிம் யூத் லீக் துணைத் தலைவர்கள் எஸ்.கே.எம். ஹபிபுல்லா, ஏ.செய்யது பட்டாணி ஆகியோர் மாநாட்டு ஆலோசனை, அழைப்பு பணி பற்றி சிறப்புரையாற்றினர். முன்பதாக சுதந்திர தொழிலாளர் அணி மாநில துணைத் தலைவர் எம். கே.முகம்மது மைதீன், எஸ். டி.யு.தென்காசி மாவட்ட தலைவர் வி.எம். அய்யூப் கான், முஸ்லிம் யூத் லீக்கினர் கடையநல்லூர் நகர எல்லையான ரஹ்மானியாபுரம் முகைதீன் ஜும்மா பள்ளி முன்பு நவாஸ் கனி எம்.பி. சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

உதுமான் மைதீன், சேவநெல்லி தஸ்தகீர், இந்தி அப்துல் மஜீத், கே.எம்.அப்துல் ரஹ்மான், அவுச்சாரி செய்யது, பி.கே.ஹாஜா மைதீன், சேயன் கலீல் ஆசிரியர், மணிச்சுடர் நிருபர் சாகுல் கமீது, புளியங்குடி ஜப்பான் உதுமான், யு.டி. மீராசா, அலுவலக பொறுப்பாளர் ஏ.ஏ.அப்துல் மஜீத், தங்கபளாச்சி சாகுல் ஹமீது, ஹஸ்புல்லா, முஸ்லிம் யூத் லீக் யு.எம்.அப்துல் ஹமீது, பி.ஏ.சைப்புல்லா, அம்மார், எஸ்.எம்.இம்ரான், கே.எம். அசிம், ஓ.எம்.ராஷிக், ஏ. ஜாவித் , கே.எஸ். அபுபக்கர் சித்திக் மற்றும் நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட தாய்ச் சபை உறுப்பினர்கள் திரளாக பங்கேற்றனர். நகர பொருளாளர் கே.கே.திவான் மைதீன் நன்றி மாநாடு ஆலோசனைக் கூட்டம் நிறைவடைந்தது.

# பிரதமர் மோடி ஆட்சியில் அதானி வளர்ந்திருக்கின்றார், நாடு விழுந்திருக்கின்றது என்று கே.எஸ்.அழகிரி விமர்சனம்

கும்பகோணம் பிப்.20-

பிரதமர் மோடி ஆட்சியில் அதானி வளர்ந்திருக்கின்றார், நாடு விழுந்திருக்கின்றது என்று கே.எஸ்.அழகிரி விமர்சித்துள்ளார்.



கும்பகோணத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- ஈரோட்டில் மகத்தான வெற்றி பெறுவோம். ஈரோடு இடைத்தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமியும், ஒ.பன்னீர்செல்வமும் ஒன்றாக இருப்பது போல் தெரியவில்லை. அவர்கள் தனித்தனியாக தான் இருக்கிறார்கள்.

பிரதமர் மோடியின் ஆட்சியில் அதானி வளர்ந்திருக்கின்றார். நாடு விழுந்திருக்கின்றது. அது தான் தற்போது நடந்திருக்கின்றது. பொதுமக்கள் பணத்தில் இயங்கக்கூடிய பாரத ஸ்டேட் பேங்க் மற்றும் எல்ஐசி நிறுவனம் சுமார் ரூ. 50 ஆயிரம் கோடி தொகையை இழந்திருக்கிறார்கள். அவர்களை, அதானி குழுமத்தில் முதலீடு செய்யப் பிரதமர் அலுவலகத்திலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஊழல், முறைகேடு அமெரிக்கா வரை பரவியுள்ளது. ஆனால் பிரதமர் மோடி வாய் திறந்து பதில் சொல்லவில்லை. நிதியமைச்சரும் தெளிவான பதிலைச் சொல்லவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா இதற்குப் பதில் கூறாமல், காஷ்மீரில் வன்முறை குறைந்துள்ளது என கூறுகிறார். இவ்வாறு அவர் கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அருகே உள்ள பொற்பனைக்கோட்டை முனீஸ்வரர் கோவிலில் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு கோட்டை நகரமான பொற்பனைக் கோட்டையில் உள்ள பொற்பனை முனீஸ்வரக்கு சந்தனம் பலன்கள் உள்ளிட்ட அபிஷேக ஆராதனை நடைபெற்று, விபூதி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# கீரமங்கலம் காவல் நிலையம் எதிரே தற்கொலைக்கு முயன்ற பெண்ணால் பரபரப்பு

ஆலங்குடி பிப்.20-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள பனங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் பரமேஸ்வரன்(25). கட்டுமாவடி பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திகா(25). கார்த்திகாவிற்கு, ஏற்கனவே கடந்த 2014-ம் ஆண்டு நரியங்காடு பகுதியைச் சேர்ந்த பாக்கியராஜ் என்பவருடன் திருமணம் நடந்து 7 வயதில் மகன் உள்ளதாக கூறப்படும் நிலையில், இருவரும் பிரிந்து வாழ்வதாக கூறப்படுகிறது.




இந்நிலையில், பரமேஸ்வரன் ஆன்லைன் பார்சல் டெலிவரி செய்த போது, கார்த்திகா இடையே தொடர்பு ஏற்பட்டு, இருவரும் கடந்த 3 மாதங்களாக சென்னையில் வசித்து வந்ததாக கூறப்படுகிறது. அப்போது, கார்த்திகாவிற்கு ஏற்கனவே திருமணம் ஆனது தெரியவந்ததால், இருவரையும் பரமேஸ்வரன் குடும்பத்தினர் பிரித்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து, கார்த்திகா கீரமங்கலம் காவல் நிலையத்தில் அளித்த புகாரை தொடர்ந்து, பரமேஸ்வரனை போலீசார் விசாரணை மேற்கொண்டபோது, கார்த்திகாவோடு செல்வதாக பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த பரமேஸ்வரனின் சகோதரி லதா பூச்சி மருந்தை குடித்து தற்கொலைக்கு முயன்றார். அவரை போலீசார் மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இதனை தடுக்கச் சென்ற கீரமங்கலம் போலீஸ் வினிதா என்பவரின் கண்ணிலும் பூச்சி மருந்து ஊற்றியதில் அவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். இச்சம்பவம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குண்டலப்புலியூர் அன்பு ஜோதி ஆசிரம விவகாரம் தொடர்பாக விசாரிக்க 5 பேர் கொண்ட குழு அமைப்பு

விழுப்புரம் பிப்.20-

அன்பு ஜோதி ஆசிரம விவகாரம் தொடர்பாக விசாரிக்க 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.




விழுப்புரம், குண்டலப்புலியூரில் உள்ள அன்பு ஜோதி ஆசிரமத்தை கேரளா மாநிலம் எர்ணாவூர் ஆழக்கூடா பகுதியை சேர்ந்த ஜூபின்பேபி மற்றும் அவரது மனைவி மரியாஜூபின் ஆகியோர் நிர்வகித்து வந்துள்ளனர். இந்த ஆசிரமத்தில் தங்க வைக்கப்பட்டவர்களில் காணாமல் போனவர்கள் பற்றி தினந்தோறும் போலீசுக்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதன்படி இன்னும் பலர் காணாமல் போயிருக்கக்கூடும் என்று போலீசார் கருதுகிறார்கள். எனவே இந்த ஆசிரமத்தில் யார், யாரெல்லாம் மாயமாகியுள்ளனர் என்பது குறித்து போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே ஆசிரமம் தொடர்பான வழக்கு சி.பி. சி.ஐ.டி. போலீசுக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில், விழுப்புரம் அன்பு ஜோதி ஆசிரம வழக்கு தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்ட நிலையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. சிபிசிஐடி கூடுதல் கண்காணிப்பாளர் கோமதி தலைமையில் 4 ஆய்வாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு வழக்கு தொடர்பான விசாரணையை இன்று தொடங்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இராணிப்பேட்டை மற்றும் ஆற்காடு பாலாற்றங்கரையில் மயான கொள்ளை திருவிழா நடைபெற்றது. புஷ்ப பல்லக்கில் அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு அலங்காரம் செய்யப்பட்டு படையல் வைத்து பூஜை நடைபெற்றது. பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# பொன்னமராவதி அருகே மஞ்சுவிரட்டு இன்று வெளிநாடு செல்ல இருந்தவர் பலி

# புதுக்கோட்டை அருகே காரில் கஞ்சா கடத்தல் விஏஓ கைது






# மோடியை குறும்படம் எடுத்து விமர்சித்தால் உங்கள் வீட்டிற்கும் ரெய்டு வரும்


| சென்னை / புதுக்கோட்டை | 20.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கா. நமச்சிவாய முதலியார் , தமிழகத் தமிழறிஞர், பேராசிரியர் (பி.1876) (இ.1936)



சி. கே. சுப்பிரமணிய முதலியார் , தமிழறிஞர், உரையாசிரியர் (பி.1878) (இ.1961)



பொபிலி அரசர் , சென்னை மாகாணத்தின் 6வது முதலமைச்சர் (பி.1901) (இ.1978)



கிரிஜா பிரசாத் கொய்ராலா , நேபாள முன்னாள் பிரதமர் (பி.1925) (இ.2010)



## இன்றைய நினைவு நாள்

சரத் சந்திர போசு , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், வழக்கறிஞர் (பி.1889) (இ.1950)



பார்வதி கிருஷ்ணன் , இந்திய அரசியல்வாதி (பி.1919) (இ.2014)



## சமூக நீதிக்கான உலக நாள்